# பலாகல பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 20 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 01 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பலாகல பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | 302 | - | - | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் விடுபட்டவை | 16 | - | - | 1,600 | - |
| (இ) | நிதிக்கூற்றுகளில் முறையற்ற வெளிப்படுத்தல்கள் | 07 | 3,939 | - | - | - |
| | - மேற்படி - | 07 | - | 3,939 | - | - |
| | - மேற்படி - | 06 | - | - | 2,939 | - |
| | - மேற்படி - | 07 | - | - | - | 2,969 |

### 1.3.2 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 331,984 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 14,973,370 கூட்டுத்தொகையான 01 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.4 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| விதி 207 | களஞ்சிய மற்றும் பொருள் வழங்கலின் போது இயலுமான வரையில் பொதுப் போட்டியின் அடிப்படையின் பிரகாரம் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 02 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 81,124 பெறுமதியான வழங்கல்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி 237 | களஞ்சிய வழங்களுக்காக கொடுப்பனவு செய்கின்ற போது பொருட்கள் கிடைக்கப் பெற்றமைக்கான இருப்பு உறுதிப்படுத்தலொன்று பெற்றுக்கொள்ளப்படாமல் வழங்குனர்களுக்கு 05 சந்தர்ப்பங்களில் ரூபா 193,890 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நி.பி 571 | 2006 / 2007 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 36,015 ஆன ஒப்பந்த வைப்பு வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 891,250 ஆக இருந்ததுடன், அதற்கு நேர்ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 664,298 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i). | வீதவரியும் வரியும் | 290 | 287 | - | - | - | - |
| (ii). | வாடகை | 800 | 799 | 173 | 731 | 467 | 264 |
| (iii). | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 50 | 54 | - | 316 | 316 | - |
| (iv). | ஏனைய வருமானம் | 8,000 | 7,665 | 2,127 | 7,450 | 3,094 | 4,356 |

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம்

பல்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 281,450 ஆன தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 11,715 ஆன முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 வீதவரிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையால் வசதிகள் வழங்கப்பட்டுள்ள பிரதேசங்கள் முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டு அப்பிரதேசங்களில் அமைந்துள்ள அசையாத ஆதனங்களின் வருடாந்த பெறுமதி அடிப்படையில் வீதவரி விதிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் வியாபார உரிமையினை வாடகைக்குவிடுகின்ற போது 1994 ஒக்தோபர் 20 ஆந் திகதிய என்சீபீ/எல்ஜீ/9/5/26 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கடந்த 03 வருடங்களின் வருமானத்தின் சராசரி அளவில் 10% ஆன ஆகக் குறைந்த வாடகைப் பணமொன்று தீர்மானிக்கப்பட்டு அதனை அடிப்படையாகக் கொண்டு எதிர்வருடங்களில் கேள்வி கோரல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டில் வியாபார உரிமை வாடகைக்கு விட்டபோது ஆகக் குறைந்த வாடகைப் பணத்தைவிட ரூபா 177,536 ஆன குறைந்த பெறுமதிக்கு வாடகைக்கு விடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறான | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறான | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 4,500 | 4,482 | 18 | 5,920 | 3,164 | 2,756 |
| ஏனையவை | 3,500 | 3,431 | 69 | 7,380 | 6,669 | 711 |
| உப மொத்தம் | 8,000 | 7,913 | 87 | 13,300 | 9,833 | 3,467 |
| மூலதனச் செலவினம் | 40,000 | 42,350 | (2,350) | 20,000 | 21,196 | (1,196) |
| மொத்தம் | 48,000 | 50,263 | (2,263) | 33,300 | 31,029 | 2,271 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (அ) | பதவி நிலைத்தரங்கள் | 01 | - |
| (ஆ) | இரண்டாம் தரங்கள் | 05 | 05 |
| (இ) | ஆரம்ப தரங்கள் | 08 | 08 |
| (ஈ) | வேறு (அமைய / தற்காலிக) | 04 | 04 |
| | | 18 | 17 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

வடமத்திய மாகாண பிரதம அமைச்சினால் அரிசி மாவுடன் அண்மித்த பேக்கிரி உற்பத்திகளை பிபல்யப்படுத்தும் செயற்திட்டம் ஒன்றினை ஆரம்பிப்பதற்காக 2007 ஆம் ஆண்டின் போது சபைக்கு ரூபா 556,865 பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தும் உரிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையினால் அவ் உபகரணங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,498,488 ஆக இருந்தது. சேவையை விட்டுச் சென்ற/ தற்போதைய விபரங்களை தேடமுடியாத 06 ஊழியர்களிடமிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 41,216 ஆன கடன்மீதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 14,503,693 ஆக இருந்தது.

## 2.6 இனங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனை மற்றும் சபையில் பராமரிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் ரூபா 10,780 பெறுமதியான நட்டங்களும் சேதங்களும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2003 செப்தெம்பர் 15 ஆந் திகதிய என்சீபீ/பீஎஸ்/பீரீ/04 ஆம் இலக்க மாகாண சபை சுற்றுநிருபத்தின் பிரகாரம் மகநெகும, கமநெகும செயற்திட்டங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிருவாகச் செலவின ஏற்பாடுகளிலிருந்து உத்தியோகத்தர்களுக்கு வழங்கக்கூடிய மேலதிகநேரக் கொடுப்பனவு, விடுமுறை தினச் சம்பளம் மற்றும் பிரயாணச் செலவுகள் போன்றவற்றை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளப்பட முடியுமாயினும் சபைக்குக் கிடைத்திருந்த அவ் ஒதக்கீடுகளில் அவ் அடிப்படைகளைப் பின்பற்றாமல் 2010 பெப்ரவரி 02 ஆந் திகதிய 63 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் ஊடாக 04 ஊழியர்களுக்கு ரூபா 25,322 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனிண்மைகள்

சபை அதிகாரப் பிரதேசத்தின் சுற்றாடல் வரைபடம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக 2010 மே 26 ஆந் திகதிய 276 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் உள்ளூராட்சி மன்றக் கட்டுப்பாடுகள் தொடர்பான இலங்கை நிறுவனத்திற்கு ரூபா 10,000 தொகைப் பணம் செலுத்தப்பட்டிருந்த போதும் 2011 யூன் 03 வரையிலும் அது பிரதேச சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

## 2.9 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் மக்களின் வசதிக்காக நலன்புரி நடவடிக்கைகளுக்குரிய நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரம், பொது வீதிகள் பொதுப் பயன்பாடு சேவைகளுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டமொன்றையும் அத்திட்டத்தினை மீளாய்வாண்டில் அமுல்படுத்தபடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.10 ஒப்பந்த நிர்வாகம்

### நிர்மாணங்கள்

நிர்மாணச் செயற்பாடுகள் தொடர்பான பகுதிரீதியான பரிசோதனைகளின் போது காணப்பட்ட குறைப்பாடுகள் பின்வருமாறு.

(அ) பலாகல பிரதேச சபையினால் ரணாவ ரோஹண அவர்களின் கடை அருகிலிருந்து தம்புளு ஹல்மில்லேவ வீதியின் மீளமைத்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட கிரவலின் கனம் போதியளவாக இல்லாதிருந்தமை மாகாண பெறியிலாளர் திணைக்களத்தின் நிலைமைக் கட்டுப்பாட்டு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் ரூபா 1,726,378 ஆன தொகையொன்று மீளாய்வாண்டின் போது ஒப்பந்த காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இக்டாட் அறிவித்தல் பிரசுரத்தின் எஸ்சீஏ/1 ஆம் இலக்க ஒப்பந்த வேலை நிபந்தனைக் கோவையின் 56 ஆம் பந்தியின் பிரகாரம் வேலைகளுக்கான அளவிடைகளைப் பெற்று அவ் அளவிடைகளை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் கொடுப்பனவு செய்ய முடியுமாயிருந்ததுடன் இயந்திர பணியை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யமுடியாதிருந்த போதிலும் அதனைக் கருத்திற் கொள்ளாது இயந்திர மணி 57.6 இற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 213,120 ஆனது ஒப்பந்த காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்.